1971 டிசம்பர் 11]

கால்நடை ஊர்தி மருத்துவ மனைகள்

***258 வின—திரு. கா. காளிமுத்து :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

முகவை மாவட்டத்தில் நடமாடும் கால்நடை ஆஸ்பத்திரிகள் தற்போது எத்தனை? எங்கெங்கு உள்ளன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தற்போது முகவை மாவட்டத்தில் நடமாடும் கால்நடை மருத்துவ மனைகள் ஏதும் இல்லை.

நடமாடும் கால்நடைகளுக்கு மருத்துவ மனை இருக்கிறது. (சிரிப்பு.)

திரு. கா. காளிமுத்து : அவ்வாறு இல்லாததால், கால்நடைகளை வியாதிவந்த காலத்தில் மருந்தகங்களுக்கு அழைத்துச் செல்ல மிக்கக் கஷ்டமாக இருப்பதால், நடமாடும் மருத்துவமனையை முகவை மாவட்டத்தில் ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இரண்டாண்டுகளுக்கு முன்னாலே கால்நடைத் துறை சீரமைக்கப்பட்டது. அப்பொழுது இந்த கால்நடைப் பராமரிப்புக்காக நடத்தப்பட்ட மருத்துவ மனைகள் கைவிடப்பட்டன. இதனால் சிவகங்கை, விருதுநகர் ஆகிய இடங்களில் இரண்டு நிலையங்கள் மூடப்பட்டன. சீரமைப்புக்குப் பின் கால்நடைச் சிகிச்சைக்காகத் துணை மருத்துவ மனைகள் ஏற்படுத்தப்பட்டதால், ஒவ்வொரு கிராமத்திற்கும், 3, 4 மைல் சுற்றளவில் மருத்துவ மனைகளாக இருக்கின்றன. அவற்றை மோட்டார் வான்கள் மூலமாக அந்த அந்த பகுதிகளுக்குக் கொண்டுசென்று பணியாற்றுவது என்ற அடிப்படையில் அவை செயல்படுத்தப்பட்டால், மேலும் தேவையிருக்காது என்பது ஆலோசனையில் உள்ளது.

கிருஷ்ணராயபுரம்—மைலம்பட்டி சாலை

***259 வின—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம்—மைலம்பட்டி சாலையிலிருந்து கோவில்பட்டி, குச்சிப்பட்டி, சேவகனூர்களை இணைக்க, சீரணிமூலம் புதிய சாலை ஒன்று போட எப்போது வேலை துவங்கப்பட்டது?

(இ) தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) 1967-68-ல் துவங்கப்பட்டது.

(இ) பட்டா நிலத்தில் சாலை அமைக்க வேண்டியிருந்ததால் நிலச் சொந்தக்காரர்களின் ஒப்புதல் பெறுவதில் தடங்கல் ஏற்பட்டதால் பணி முடிவடையாமல் இருந்தது. தற்போது நிலச் சொந்தக்காரர்கள் நிலம் வழங்க ஒப்புதல் அளிக்க ஒத்துக்கொண்டதால் மேற்படி சாலை டிசம்பர் திங்களுக்குள் முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

சீரணித் தலைவர்களுக்கு ஜீப் கார்கள்

***260 வின—திரு. பி. எல். மணியன் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

மாவட்ட சீரணிப்படைத் தலைவர்களுக்கு ஜீப் கார் ஒதுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : மாவட்ட சேரணிப்படைத் தலைவர்களுக்கு ஜீப் கார் தனியாக ஒதுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, போர்க்காலத்தில் உதவியாக இருக்கும் வகையில், சேரணிப்படையினருக்குத் துப்பாக்கி சுடும் பயிற்சி அளிப்பதன்மூலம், தற்காப்புப் பயிற்சியும் அளிக்கப்படலாம் என்ற வகையில் அந்த போர் முறைகளைப் பயிற்சி அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அதுபற்றிப் பரிசீலிக்கப்படலாம்.

கொள்ளிடத்திற்கு உதவிப் பதிவாளர் அலுவலகம்

*261 வினா—திரு. எஸ். வடிவேல் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொள்ளிடத்தில் சப்-ரிஜிஸ்டிரார் அலுவலகம் ஒன்று ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, கொள்ளிடம் பகுதி மக்கள் சீர்காழிக்குப் போக வேண்டியதாக இருக்கிறது. 25 மைல் தூரம் இருக்கிறது. கடினமாக இருக்கிறது. ஆகவே, கொள்ளிடத்திலேயே ஒரு சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் திறக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : கொள்ளிடத்தில் துணைப் பதிவாளர் அலுவலகம் வைப்பதுகுறித்து நாகப்பட்டிணம் பதிவாளர்மூலம் பரிசீலனை மேற்கொள்ளப்பட்டது. ஆனால் கொள்ளிடத்திற்கும் சீர்காழிக்கும் அதிக தூரம் இல்லை என்பதாலும், துரித பஸ்கள் போவதாலும், அங்கே ஒரு அலுவலகம் தேவையில்லை என்று முடிவு எடுக்கப்பட்டது.

பர்கூர் மலைவாழ் மக்கள்

*262 வினா—திரு. ஈ. எம். நடராசன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், பவானி வட்டம், பர்கூர் மலைப்பகுதியில் உள்ள மலைஜாதி மக்களின் தொகை என்ன?

(இ) இவர்கள் சேலம், திருச்சி, வடார்க்காடு, தென்னார்க்காடு மாவட்டங்களில் உள்ளது போல மலைஜாதி மக்களாகக் கருதப்பட்டுச் சலுகைகள் பெறுகிறார்களா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) சுமார் 1,000.

(இ) இல்லை.